## 4. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

### (அ) சென்னை, கெல்லீஸ் கூர்நோக்கு இல்லத்திற்குப் புதிய கட்டடம், முதியோர் இல்லங்களுக்கான உணவூட்டு மானியம் உயர்வு, சேவை இல்லங்கள் மற்றும் அரசு நலத் திட்டங்களின்கீழ் பயன்பெற ஆண்டு வருமான உச்சவரம்பை உயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*1. சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்டதால் இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்படாத நிகழ்வுகளில், அச்சிறார்களைத் தற்காலிகமாக தங்க வைக்கும்பொருட்டு, கூர்நோக்கு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது அரசால் 6 கூர்நோக்கு இல்லங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் 1 கூர்நோக்கு இல்லமும் நடத்தப்பட்டு வருகின்றன.*

*சென்னை கெல்லீஸ் சிறுவர்களுக்கான கூர்நோக்கு இல்லக் கட்டடம் பழுதடைந்துள்ள காரணத்தினால் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளையும் கொண்ட 1,000 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இக்கட்டடத்தில் தங்கும் அறைகள், சமையலறையுடன்கூடிய உணவு அருந்தும் கூடம், தொழிற்பயிற்சிக் கூடம் மற்றும் வகுப்பறைகள் உள்ளிட்ட சிறார்களை*

நல்வழிப்படுத்துவதற்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் இருக்கும்.

2. மாநில அரசு நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பயனடையும் முதியோர்களுக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியம் 300/- ரூபாயிலிருந்து 1,200/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சமூக நலத் துறையின்கீழ், சென்னை, கடலூர், தஞ்சாவூர், சேலம், சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி, பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சேவை இல்லங்களில் தங்க ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, இடைநிலை ஆசிரியைப் பயிற்சிக்கான மாணவியர் சேர்க்கை மற்றும் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களிலும் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாயிலிருந்து 72,000/- ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக இத்திட்டங்களினால் அதிக பயனாளிகள் பயனடைவர்.

பிற்பகல் 12-50

## (ஆ) பார்வையற்றவர்களுக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்குதல், காது கேளாமையைப் போக்க முன்னோடித் திட்டம், சிறப்புக் குழந்தைகளுக்கான மாற்றுத் தகவல் பரிமாற்ற முறை திட்டம் செயல்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும்வகையிலும், நாட்டின்